# TAKLIMAT DSKP KSSR BAHASA TAMIL SJKT TAHUN 5 KEPADA JURULATIH UTAMA (JU)

"Peneraju Pendidikan Negara"

முதன்மைப் பயிற்றுநருக்கான
தமிழ்மொழித் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தின் விளக்கம்
ஆண்டு 5
(தமிழ்ப்பள்ளி)

# இலக்கணம்

Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# இலக்கணம்

## மொழி

ஒருவரின் உள்ளத்தில் தோன்றும் கருத்துகளை வெளியிடவும் மற்றவர் கூறும் கருத்துகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் பயன்படும் கருவி

## இலக்கணம்

ஒருவர் தம் கருத்தினைப் பிழையின்றித் தெளிவாக வெளிப்படுத்துவதற்குத் துணைபுரியும் கருவி

# நோக்கம்

- மொழியின் சிறப்பை அறியச் செய்தல்
- மொழியைச் சரியாகப் பயன்படுத்தச் செய்தல்
- மொழித்திறன்களை வளப்படுத்துதல்
- காலந்தோறும் ஏற்படும் வளர்ச்சியை அறிந்து பயன்படுத்தச் செய்தல்

# புதிய கலைத்திட்டத்தில் இலக்கணம்

**ஆண்டு ஐந்து இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:-**

- இலக்கண அறிவைப் பெறுதல்
- அதனைச் சரியாகப் பயன்படுத்துதல்

# இலக்கணத்திற்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**5.3 சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

5.3.21 என்றாலும், எனினும், அதற்காக, இன்னும், மேலும் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

5.3.22 ஆயினும், ஆனாலும், இருப்பினும், இருந்தாலும் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# இலக்கணத்திற்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

5.3.23 அல்லது, உம் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

5.3.24 செய்வினை, செயப்பாட்டுவினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# இலக்கணத்திற்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**5.5 வாக்கிய வகைகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

5.5.8 நேர்க்கூற்று, அயற்கூற்று வாக்கியங்களை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

# இலக்கணத்திற்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**5.7 புணர்ச்சி வகைகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

5.7.2 விகாரப் புணர்ச்சியில் தோன்றல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

5.7.3 விகாரப் புணர்ச்சியில் திரிதல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# இலக்கணத்திற்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**5.8 வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

5.8.4 அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

5.8.5 ஓரெழுத்துச் சொல்லுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# இலக்கணத்திற்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**5.9 வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

5.9.4 அவை, இவை, எவை என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

5.9.5 அன்று, இன்று, என்று என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# இலக்கணத்திற்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**5.9 வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

5.9.6 அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

5.9.7 அத்தனை, இத்தனை, எத்தனை என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# மாதிரி அணுகுமுறைகள்

## அ) அறிவர்

- கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பிக்கலாம்.
- கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் இலக்கண விதியை மாணவர்க்கு நன்கு விளக்கக் கூடியனவாக இருத்தல் வேண்டும்.

# மாதிரி அணுகுமுறைகள்

## அ) அறிவர்

- எடுத்துக்கொண்ட இலக்கண விதிக்குப் பொருத்தமான உத்தியைக் கையாண்டு கற்பிக்க வேண்டும்.
- மாணவர்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புடைய எடுத்துக்காட்டுகள் கொடுப்பது நலம்.

# மாதிரி அணுகுமுறைகள்

## ஆ) சரியாகப் பயன்படுத்துவர்

- பொருத்தமான பயிற்சிகள் வழங்கி மாணவர்களின் அறிதலையும் புரிதலையும் வலுப்படுத்த வேண்டும்.
- கொடுக்கப்படும் பயிற்சிகள் மாணவர்கள் கற்ற இலக்கணக் கூறுகளைப் பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

# தனிப்பாடமாகக் கற்பிப்பதன் அவசியம்

- கற்றல் தரத்தை அடைய அவகாசம் இருக்கும்
- பல்வகை உத்திகளைப் பயன்படுத்தலாம்
- ஒவ்வொரு மாணவரையும் கவனிக்கலாம்
- விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் நடைபெறும்


Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# மதிப்பீடு

- எல்லா மாணவரும் கற்றல் தரத்தை அடைந்துள்ளதை உறுதிசெய்வதாக இருக்க வேண்டும்.
- மதிப்பீடு, தனியாள் முறையில் செய்யப்பட வேண்டும்.
- பேச்சு, எழுத்துத் திறன்களின்வழி மதிப்பிட வேண்டும்.

# மாதிரிப் பாடம்

| | | |
|---|---|---|
| பாடம்/வகுப்பு | : | தமிழ்மொழி/ஆண்டு 5 |
| தலைப்பு | : | திரிதல் விகாரப் புணர்ச்சி |
| நேரம் | : | 60 நிமிடம் |
| கற்றல் தரம் | : | 5.7.3 |
| நோக்கம் | : | திரிதல் விகாரப் புணர்ச்சியில் ள்-ட் ஆகவும் ல்-ற் ஆகவும் மாறும் என்பதனை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

# கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள்

- கொடுக்கப்படும் வாக்கியங்களை மாணவர்கள் உரக்க வாசித்தல்; ஆசிரியர் திரிதல் விகாரப் புணர்ச்சி விதிகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல்.
- மாணவர்கள் குழுவில் கலந்துரையாடித் தவறாகச் சேர்த்து எழுதப்பட்டிருக்கும் சொற்றொடர்களைத் திருத்தி எழுதி விளக்கம் அளித்தல்.
- மாணவர்கள் கொடுக்கப்படும் சொற்றொடர்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுதல்.

# கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள்

- வாக்கியங்களிலுள்ள காலி இடங்களைப் பொருத்தமான சொற்றொடர்களைக் கொண்டு நிறைவு செய்தல்.


Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| விரவி வரும் கூறுகள் | : | மொழி |
| பயிற்றுத் துணைப்பொருள் | : | பயிற்சித்தாள் |
| மதிப்பீடு | : | திரிதல் விகாரப் புணர்ச்சியில் ள்-ட் ஆகவும் ல்-ற் ஆகவும் மாறும் என்பதனை அறிந்து சரியாகப் பயன்படுத்துதல். |
| சிந்தனை மீட்சி | : | i. கற்றல் தரத்தை அடைந்த/ அடையாத மாணவர்களின் எண்ணிக்கை.<br>ii. தொடர் நடவடிக்கை |

"Peneraju Pendidikan Negara"

# நன்றி,
# வணக்கம்

Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia